**பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும்**
**ஆராய்ச்சி நிலையம், காரைக்கால்– 609 603**


# காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

**(21.09.16 முதல் 25.09.16 வரை)**


தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260


---


**Bulletin No. 076 (09) PJN/GKMS/2016** **Date: 20.09.16**


## கடந்த வார வானிலை 16.09.16 – 19.09.16

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 36-37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 25-26 |
| மேக மூட்டம் | 0-2 |
| ஈரப்பதம் (%) | 40-87 |
| காற்றின் வேகம் (கி.மீ) | 4-7 |

## எதிர்பார்க்கப்படும் வானிலை 25.09.16 – 8.30 மணி நேரம் வரை

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி 21.09.16 | தேதி 22.09.16 | தேதி 23.09.16 | தேதி 24.09.16 | தேதி 25.09.16 |
| மழை (மி.மீ) | 6 | 4 | 4 | 0 | 3 |
| அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 35 | 35 | 35 | 34 | 34 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 27 | 27 | 26 | 26 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (%) | 63-73 | 63-73 | 63-73 | 65-75 | 65-75 |
| காற்றின் வேகம் (கி.மீ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்றின்திசை | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

**குறுஞ்செய்தி:**

***செப்டம்பர் 24 ஐ தவிர வரும் ஐந்து நாட்களில் இலேசான மழை சில இடங்களில் இருக்கும்.***

**வேளாண் அறிவுறை:**

- மத்திய கால நெல் இரகங்களான வெள்ளை பொன்னி மற்றும் ADT 39 போன்ற நெல் இரகங்களை தேர்வு செய்து பயிரிடலாம்.
- நெல் நாற்றங்காலில் இலைப்பேனை கட்டுப்படுத்த பாஸ்போமிடான் 40 SL லிட்டருக்கு 1 மி.லி அல்லது குளோரிபைரிபஸ் 20 EC லிட்டருக்கு 2 மி.லி தெளிக்கவும்.
- ஒரு கிலோ விதைக்கு கார்பன்டசிம் அல்லது பைரோகுயிலான் 2 கிராம் அல்லது டிரைசைக்லோசோல் கரைசல் 2 மி.லி. கலந்து 10 மணி நேரம் ஊர வைத்து பின்னர் வடிகட்டவும்.
- நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் 3 பாக்கெட் (600 கிராம் /ஹெ) மற்றும் பாஸ்போபாக்டீரியா 3 பாக்கெட் ( 600 கிராம் /ஹெ) அல்லது அசோபாஸ் 6 பாக்கெட் (1200 கிராம் /ஹெ) ஆகியவற்றை போதுமான அளவு தண்ணீர் சேர்த்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.
- நெல் நாற்றாங்காலில் களைகளைக் கட்டுப்படுத்த விதைத்த மூன்றாம் நாள் ஹெக்டருக்கு 300 கிராம் பிரிடில்லாகளோர் + சேஃப்பனர் என்ற களைக்கொல்லியை தெளிக்கவும். களைக்கொல்லியை தெளிப்பதற்கு முன்பாக கண்ணாடி அளவு நீர் நிறுத்தி வடிக்கட்டாமல் பார்த்துக்கொள்ளவும்.

**முதல்வர்**